[1972 ஆகஸ்ட் 24

ஊத்துக்கோட்டையிலுள்ள விதைப் பண்ணை

***319 வினா—திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ஊத்துக் கோட்டையில் உள்ள விவசாய விதைப்பண்ணை முழுமையாகச் செயல்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள அரசினர் விதைப் பண்ணை 37.33 ஏக்கரா பரப்பளவு கொண்டது. இப்பரப்பளவில் 1.92 ஏக்கரா கட்டடம் மற்றும் பாதைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து நிலமும் பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த விதைப் பண்ணையில் எவ்வளவு லாபம் கிடைக்கிறது? அந்தப் பகுதியில் நல்ல வேளாண்மை நிலங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் இந்தப் பண்ணையை மேலும் விரிவுபடுத்தி சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தை அமல் படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையில் அரசு விதைப் பண்ணை 1956-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 37.33 எக்கர் கையகப் படுத்தப்பட்ட நிலத்தில் இப்பண்ணை உள்ளது. இது நஷ்டத்தில் செயல்பட்டு வந்தது. 1967-68-ல் 3,840 ரூபாய் நஷ்டம்; 1968-69-ல் 7,852 ரூபாய் நஷ்டம்; 1969-70-ல் 12,777 ரூபாய் நஷ்டம். வளம் குறைந்த மண்ணுகையும், நீர்க்கழிவு பூமியாகவும், ஆடுமாடுகள் அத்து மீறி நுழைவதன் காரணமாகவும் இந்த நஷ்டம் ஏற்பட்டது. 1970-71-ல் 1,239 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. 1971 டிசம்பர் வரையிலும் உள்ள கணக்கைப் பார்த்தால் அதிலும் ஓரளவு லாபம் கிடைத்திருக்கிறது. இனிமேல் அந்த விதைப் பண்ணை நல்ல முறையில் லாபகரமாக நடக்க வாய்ப்பு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆதாயம் வர என்ன முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன? ஆடுமாடுகள் வருவது தடுக்கப்பட்டிருக்கிறதா? மண்வளம்

1972 ஆகஸ்ட் 24]

பெருகியிருக்கிறதா? அந்தப் பண்ணையை லாபகரமாக நடத்த முயற்சி செய்வார்களா? அப்படி இல்லையென்றால் மூடிவிடுவதற்காவது அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தண்ணீர் வசதி எந்தப் பகுதியில் இருக்கிறதோ அந்த அளவுக்குள்ள ஏரியாவில் பாசனம் நடைபெறுகிறது, லாபகரமாக நடக்கிறது. ஆடுமாடுகள் வருவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது ஓரளவு லாபம் வந்து கொண்டிருக்கிறது. மேலும் லாபம் வரக் கூடிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : இவ்வளவு குறைபாடுள்ள பண்ணை எந்தக் காலத்தில் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

வெங்காயம் ஏற்றுமதி.

*320 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து விவசாயிகளுக்கு வெங்காயம் வெளிநாடு மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதி இல்லாத காரணத்தால் வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே வெங்காய சாகுபடி ஏராளமான விவசாயிகள் செய்து கொண்டிருந்தார்கள். அதை இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த காரணத்தினால் அவர்களுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. ஆனால் அது இன்றைக்கு